எம்.சி.ஓ.பி எண்: 2414/2023 தேதி: 15.10.2025

மசா. : 1

பெயர் : ஜெயராம்

த/பெ. : சுப்பிரமணி

வயது : 68

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல்8 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் நடந்து சென்றேன். இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் சொல்லும்விதமாக விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் முகமது ஆர்சிப் கவனக்குறைவு அஜாக்கிருதை காரணம் இல்லை என்றால் சரியல்ல. விபத்தின் காரணமாக மட்டும் நான் சிகிச்சை பெறவில்லை என்றாலும் எனக்கு ஏற்கனவே இருந்த உடல் உபாதைகளுக்கும் சிகிச்சை பெற்றிருந்தேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல ஊனமோ, பாதிப்போ இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் முகமது ஆர்சிப்புக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று அவருக்கு பிரிவு 3 ரெட் வித் 181 எம்.வி ஆக்டின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனவே அவர் குற்றவியில் 6வது நீதிமன்றத்தில் அபாரதம் செலுத்தி உள்ளார் என்றால்தெரியாது,. எனவே இந்த விபத்தனாது 01.04.2022க்கு பிறகு ஏற்பட்டதால் காப்பீடு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் இரண்டாம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. நான் ஏதவாது இழப்பீடு பெறவேண்டுமானால் அதை 1ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. இந்த மனு இரண்டாம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகைக்கு ஆதாரம் தாக்கல் செய்யாத காரணத்தால் அது கிடைக்கதக்கதல்ல எ்னறால்சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.